# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1950/6 - 2016 ජනවාරි මස 18 වැනි සඳුදා - 2016.01.18

*1950/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: பல 4 -2/4/2012/D/400
பிரதேச செயலாளரின் குறிப்பு இல. : HIK/DS/LND/INV/25

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 43ஏ, ஹெந்தல கிராம அலுவலர் பிரிவில் பூஸ்ஸ எனும் கிராமத்தில் அமைந்துள்ள காலி மாவட்ட நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட இல. சு. வ. ப. கா. 4112 உம் 2015.02.09 ஆந் திகதியுடைய சுவடி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 0.3975 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட திவுல்கஹகும்புர எனும் கீழே விபரிக்கப்படும் (2) இரு காணித் துண்டுகள் பின்வருமாறு:

**1. துண்டு இலக்கம் 1**

காணியின் பெயர்: திவல்கஹகும்புர; விபரம்: சேற்று நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: பூஸ்ஸ புகையிரத வீதியில் ''நந்தா'' எனும் விலாசத்தில் வதியும் சுமனசிறி த சில்வா; விஸ்தீரணம்: 0.2091 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம் 2**

காணியின் பெயர்: திவல்கஹகும்புர; விபரம்: சேற்று நிலம், 35 - 45 வரையிலான வயதுடைய தென்னை மரங்கள் இரண்டு மற்றும் 15 - 25 வரையிலான வயதுடைய தென்னை மரங்கள் இரண்டும் உள்ளன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: பூஸ்ஸ, கெந்தல, கலுபாலகே வத்தையில் வதியும் குணரத்ன சுனீதா மெண்டிஸ்; விஸ்தீரணம்: 0.1884 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தமயந்தி பரணகம,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை.

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை,
2015, நவெம்பர் 24.

2 - 22

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேற்படி தலைப்பின் கீழ் 2015 ஆந் திகதிய 1896 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிஸக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலில் பின்வருமாறு நில அளவை இலக்கம் திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் பகிரங்க அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

| நீக்கப்பட்ட பகுதி | பதிலாக சேர்க்கப்பட்ட பகுதி |
|---|---|
| VA/ VA/ 2014/ 140 | Topo PP No. 57 |

கா. உதயராஜா,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2015, திசெம்பர் 21.

2 - 23/1

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேற்படி தலைப்பின் கீழ் 2015 ஆந் திகதிய 1904/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிஸக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலில் பின்வருமாறு நில அளவை இலக்கம் திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் பகிரங்க அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

| நீக்கப்பட்ட பகுதி | பதிலாக சேர்க்கப்பட்ட பகுதி |
|---|---|
| VA/ VAV/ 2014/ 141 | Topo PP No. 57 |

கா. உதயராஜா,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2015, திசெம்பர் 21.

2 - 23/2

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/2/5/5/2058
GAM 3079/ 23B

2001.02.09 ஆந் திகதிய 1170/23 ஆம் இலக்க (விசேட) வர்த்தமானியில் பகுதி III இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

மு. பி. கம் 3079 இல் துண்டு இல் 23 வரைபட இல. கம்/ஜா/2001/420 இன் துண்டு இல் 23பீ.

துண்டு இல. 23பீ

காணியின் பெயர்: வெடகெய்யாகஹ கும்புர; விபரம்: சதுப்பு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எம். றொவெள், டப். ஆர். எம். றொவெள், டப். எம். றொவெள், கே. டீ. டனவதீ; விஸ்தீரணம்: 0.1630 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர் களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எஸ். பீ. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

பிரதேச செயலகம்,
ஜா-எல,
2016, சனவரி 08.

2 - 24

## திருத்தம்

**1964 ஆம் ஆண்டில் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 03ஜே/93/எச்டபிள்யூ/92
குறிப்பு இல.: வ/1/2/அத். 03

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

வலல்லாவிட்ட பிரதேச செயலாளரின் 2015, யூன் 03 ஆந் திகதிய அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015, ஏப்பிறல் 28 ஆந் திகதிய 1912/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பகுதி III இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் 2016, பெப்புருவரி 02 மு.ப. 10.30 எனவும் 2015, யூன் 10 ஆம் திகதிய அறிவித்தல் 2016, பெப்புருவரி 09 மு.ப. 10.30 எனவும் திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், பெலவத்தை கிராமத்தில் அமைந்துள்ள, நில

அளவையாளர் அதிபதி சார்பாக களுத்துறை மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 112 மற்றும் பிற்சேர்க்கை இல. 94 இல் துண்டு இல. 2544, 2545, 2547 மற்றும் 2548 வரை காட்டப்பட்டுள்ள சுமார் 0.0233 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய நான்கு (4) காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல.2544**
காணியின் பெயர் : தேமோதர கங் கந்த பிட்ட கற்றிய; விபரம்: வீதி; ஆரம்ப உரிமை கோருபவர்: குசும்பால வலகளுஆராச்சி மற்றும் டீ.சீ.வலகளுஆராச்சி; விஸ்தீரணம்: 0.0025 ஹெக்டயார்.

**2. துண்டு இல.2545**
காணியின் பெயர் : தேமோதர கங் கந்த பிட்ட கற்றிய ; விபரம் : வீதி ; ஆரம்ப உரிமை கோருபவர் : எச்.டீ.காமினி ; விஸ்தீரணம்: 0.0120 ஹெக்டயார்.

**3. துண்டு இல.2547**
காணியின் பெயர் : தேமோதர கங் கந்த பிட்ட கற்றிய ; விபரம் : தோட்டம் ; ஆரம்ப உரிமை கோருபவர் : டீ.சீ.வலகளுஆராச்சி ; விஸ்தீரணம்: 0.0077 ஹெக்டயார்.

**4. துண்டு இல.2548**
காணியின் பெயர் : தேமோதர கங் கந்த பிட்ட கற்றிய ; விபரம் : தோட்டம் ; ஆரம்ப உரிமை கோருபவர் : எச்.டீ.காமினி ; விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.

ஆர்.எம்.தர்ஷனா ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
வலல்லாவிட்ட.

பிரதேச செயலகம்,
வலல்லாவிட்ட,
2016, சனவரி 14.

2 - 25

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.